பன்னாட்டு இன்பக் கல்விச் சுற்றுலா – வியட்நாம் – 2022

முன்கதை:

சிவகாசி பட்டயக் கணக்காளர்கள் கிளை சார்பாக ஆண்டு தோறும் வெளிநாட்டுக் கல்விச் சுற்றுப் பயணம் மேற்கொள்கின்றார்கள் என்பது பெருமைக்குரிய மற்றும் மகிழ்வுக்குரிய சாதனையாகும். இந்தியாவின் வேறெந்தச் சிறுகிளையிலும் இது போன்ற ஒரு முயற்சி எடுக்கின்றார்களா என்பது கேள்விக் குறியே. வெளிநாட்டுப் பயணம் குறித்த அறிவிப்பு வெளியாகியவுடன் இந்தியாவின் பல கிளைகளிலிருந்தும் இணைந்து கொள்ளும் ஆர்வமிக்க பல உறுப்பினர்களின் வயது, மொழி மற்றும் செல்லும் இடத்தில் இருக்கும் பலவித சிக்கல்களால் இதைத் துணிந்து யாரும் முயற்சி செய்வதில்லை என்பது தான் உண்மை. எனவே இதைத் தொடர்ந்து நடத்தி வரும் சிவகாசிக் கிளை உண்மையிலேயே சாதனை படைத்து வருகின்றது எனலாம். இதற்குக் காரணம் பல நாடுகளுக்குச் சென்று வந்த அனுபவமிக்க சிவகாசிக் கிளையின் முன்னாள் தலைவர்கள் திருவாளர்கள் ராஜபாண்டியன் மற்றும் வீரபத்திரன் ஆகியோர் என்பதில் எந்த ஒரு ஐயமுமில்லை. அதற்கு மற்றுமொரு காரணம் இதற்கென்று அமைந்த சுற்றுலா அமைப்பாளரான மதுரை மீரஜ் டிராவல்ஸ், திரு. பஹாவுதீன் என்றால் அது மிகையாகாது. தொடர்ந்து அனைத்து சுற்றுலாப் பயணங்களின் போதும் குறைந்த செலவில் நிறைந்த ஒரு பயணத்தை அனைவருக்கும் வடிவமைத்துத் தானும் உடன் வந்திருந்து கவனித்து ஒரு சுமை தாங்கியாகத் திகழ்கின்றார்.

இலங்கை, சீனா, துபாய் ஆகிய நாடுகளுக்கு உறுப்பினர்களை அழைத்துச் சென்று வந்த வேளையில் கொரோனா பெருந்தொற்றின் காரணமாகச் சில ஆண்டுகளாக இந்த வெளிநாட்டுப் பயணங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இப்போது சுமுகமான சூழ்நிலை காரணமாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் தான் 2022ம் ஆண்டில் நானும் கலந்து கொண்டு சென்று வந்த வியட்நாம் சுற்றுலா ஆகும். நான் முன்பு இலங்கைச் சுற்றுலாப் பயணத்தில் கலந்து கொண்டிருந்தாலும் மற்ற நாடுகளுக்குச் செல்லும் பயணங்களில் பல்வேறு காரணங்களால் கலந்து கொண்டதில்லை. இந்த முறை சிவகாசி கிளையின் முதல் தலைவரான திரு. செண்பகமூர்த்தி அவர்களின் வற்புறுத்தலாலும், எனது ஆசான் திரு. கிரிதர் அவர்கள் தலைமையில் இந்தச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்பட்டதாலும் நானும் கலந்து கொண்டேன்.

இந்த முறை வியட்நாம் பயணம் நடக்குமா என்ற சந்தேகத்துடனேயே இந்தப் பயணம் ஆரம்பித்தது தான் ஆச்சரியத்தின் உச்சகட்டம். பயணத்திற்குத் தயாராக வேண்டும் என்று முதலில் கடவுச்சீட்டு, கொரோனா பெருந்தொற்றுக்கான தடுப்பூசி போட்ட சான்றிதழ், வருமான வரி நிரந்தர அட்டை ஆகியவற்றை அனுப்பி வைத்து வியட்நாமின் நுழைவாணை பெறுதற்கும் பெங்களூரிலிருந்து வியட்நாம் செல்வதற்கான பயணச்சீட்டு அனைவருக்கும் எடுப்பதற்கும் 2022 செப்டம்பர் இறுதி மற்றும் அக்டோபர் முதல் வாரத்தில் பஹாவுதீன் முயற்சி எடுக்க ஆரம்பித்தார். இதற்காக ஒரு வாட்ஸப் குழுவும் உருவாக்கப்பட்டு அதில் அனைவரும் இணைக்கப்பட்டு முழு ஆர்வத்துடன் அனைவரும் விவாதித்துக் கொண்டிருந்தனர்.

நுழைவாணை மற்றும் பயணச் சீட்டு ஆகியவை பெற்றிருந்த நிலையில் திடீரென்று பெங்களூரிலிருந்து வியட்நாம் செல்லும் சேவைகள் அனைத்தும் ரத்து செய்யப்படுவதாக விமான நிறுவனம் சார்பில் அறிவிப்பு வந்ததும், சரி இந்தப் பயணமும் ரத்து செய்யப்படும் என்றே அனைவரும் நினைத்தார்கள். ஆனால், பஹாவுதீனோ நம்பிக்கையுடன் அனைத்துப் பயணச் சீட்டுகளையும் மும்பையிலிருந்து கிளம்பும் விமானத்திற்கு மாற்றிப் பயணத்தை நடத்தி விட முயற்சி செய்தார். அவரது முயற்சியின் விளைவாக அனைவரும் மும்பையிலிருந்து கிளம்பும் படி ஆயிற்று. இதனால் பல உறுப்பினர்களும் அதிகப்படியான செலவு மற்றும் அசௌகரியங்களுக்கு ஆளானார்கள். இருந்த போதிலும் அனைவரும் பொறுமையாகக் கலந்து கொண்டது நெல்லிக்கனி போல் முதலில் கசப்பாக இருந்தாலும் பின்னர் அனைவருக்கும் என்றென்றும் நீங்காத இனிமையான நினைவுகளுடன் இந்த வியட்நாம் பயணம் நிகழ்ந்தேறியது. இதில் சிலர் நாங்கள் வர இயலாது என்று கழன்று கொண்டிருந்தாலும் இந்தச் சுற்றுலா நடைபெற்றிருக்குமா என்பது சந்தேகமே. எனவே இச்சுற்றுலா நிகழ்ந்தமைக்கு இதில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் காரணம் என்பதில் ஐயமேதுமில்லை.

அமெரிக்க டாலர் அல்லது வியட்நாம் டாங் மட்டுமே செல்லும் என்பதால் அனைவரும் டாலர் மற்றும் டாங் ஆகிய நாணயங்களுக்கு மாற்றிக் கொண்டனர். கிரிதர் சார் உதவியுடன் நானும் 100 அமெரிக்க டாலர் மட்டும் மாற்றிக் கொண்டு சென்றேன்.

இந்தப் பயணத்தில் கலந்து கொண்ட பட்டயக் கணக்காளர்கள்/குடும்பத்தினர் விபரம்:

***சிவகாசியிலிருந்து**:*

1. ***திரு. கிரிதர்***
2. ***திருமதி அனுராதா கிரிதர்***
3. ***திரு. செண்பகமூர்த்தி (மூர்த்தி)***
4. ***திரு. சண்முகவேல் (விருதுநகர்)***
5. ***திரு. ராஜபாண்டியன்***
6. ***திரு. வீரபத்திரன்***
7. ***திரு. சரவணன்***
8. *செல்வி. நிவேதிதா (சரவணனின் மகள்)*
9. ***அடியேன் ரத்தினகிரி***
10. ***திரு. ராஜபிரதீபன்** (சின்னத்தம்பி)*
11. ***திரு. வசந்த்** (பெரியதம்பி)*

***மதுரையிலிருந்து**:*

1. ***திரு. ஜெயசீலன்***
2. *திருமதி கீதா ஜெயசீலன்*
3. ***திரு. சுதாகர்***
4. *திருமதி. கௌசல்யா சுதாகர்*
5. *திரு ராஜேந்திரசிங் சௌஹன்*
6. *திருமதி சரிதா சௌஹன்*
7. ***திரு. கலைராஜ்***
8. *திருமதி மீனாக்ஷி கலைராஜ்*
9. ***திருமதி அழகம்மை***
10. *செல்வன் முத்துக்கருப்பன்*

***சென்னையிலிருந்து**:*

1. ***திருமதி ஸ்ரீபிரியா***
2. ***திருமதி கீதா***
3. ***திருமதி அனிதா***
4. ***திருமதி சுனிதா***

***வேலூரிலிருந்து**:*

1. ***திரு. நாகேஸ்வரன்***
2. *திருமதி யமுனா நாகேஸ்வரன்*

***கொடைக்கானலிலிருந்து**:*

1. ***திரு. பழனிவேல்***
2. *திருமதி செம்பியன்மாதேவி*

***பெங்களூரிலிருந்து**:*

1. ***திரு. சிவகுமார்***
2. ***திரு. சம்பு சர்மா***
3. ***திரு. அர்ஜுன் மச்சினா***
4. ***திரு. அசோக்குமார் மச்சினா***

இவர்களுடன் மீரஜ் டிராவல்ஸ் பஹ்ரைன் ஆகிய 34 பேர் கொண்ட குழுவாக வியட்நாம் சென்று வந்தோம். இதில் 24 பேர் பட்டயக் கணக்காளர்கள்.



வயதின் அடிப்படையில் பார்த்தால் 1940களில் பிறந்த ஐயா திரு. சண்முகவேல் அனைவருக்கும் மூத்தவர். 1950 மற்றும் 1960களில் பிறந்த மூத்தகுடியினரே 20 பேர் என்பது ஆச்சரியத்துக்குரியது. எங்களைப் போன்ற 1970 இளைஞர்கள்(!) 6 பேரும் உண்டு. 1990களில் பிறந்த சின்னத்தம்பி மற்றும் பெரியதம்பியும் வாலிபர்கள். சிறுவர் முத்துக்கருப்பனும் செல்வி நிவேதாவும் மட்டுமே 2K கிட்ஸ்! இப்படியான ஒரு குழுவை கற்பனையிலும் நினைத்துப் பார்க்கவியலாது. ஆனால் அனைவரும் வயதில் மூத்தோர்களாக இருந்தாலும் மனதில் இளைஞர்கள் என்பது போகப் போகத் தெரியவந்தது.

03-11-2022 அன்று இரவு 9 மணியளவில் மும்பை பன்னாட்டு விமான முனையம் எண் 2ல் அனைவரும் சந்திக்க வேண்டும் என்று பயணிகள் அனைவருக்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அவரவர்கள் எங்கிருந்தாலும் கிளம்பி அங்கு வந்து சேர வேண்டும் என்பது திட்டமாகும். எனது பயணம் 03-11-2022 வியாழக்கிழமை காலை கிரிதர், அனுராதா, மூர்த்தி ஆகியோருடன் கிரிதர் சாரின் மகிழ்வுந்தில் ஆரம்பமானது. அனைவரும் கிளம்பி மதுரை விமான நிலையத்தில் சென்று மும்பை விமானத்தில் ஏறுவதற்காகக் காத்திருந்த வேளையில் சண்முகவேல், பஹாவுதீன் மற்றும் மதுரையிலிருந்து வருபவர்களையும் கண்டோம். மதியம் மும்பை விமான நிலையத்தை அடைந்த நாங்கள் நால்வர் மட்டும் மும்பை மஹாலக்ஷ்மி கோவில் மற்றும் விநாயகர் கோவிலைக் கண்டு மஹாலக்ஷ்மி மற்றும் விநாயகர் ஆசியுடன் மீண்டும் மும்பை விமான நிலையத்திற்கு மாலை 7.30 மணியளவில் வந்து சேர்ந்தோம். அங்கே 8.30 மணிக்குள் திட்டமிட்டபடி ஒவ்வொருவராக அனைவரும் வந்து சேர்ந்தனர்.

இவ்விடத்தில் கிரிதர் சாரின் முன்யோசனையையும் சிவகாசியின் விருந்தோம்பலையும் சொல்லியே ஆகவேண்டும். அனைவருக்கும் தரவேண்டும் என்று தயாராக நிறைய கடலைமிட்டாய் பொதியும், அவல், கடலை, சீடைப் பொதியும் கொண்டு வந்திருந்தார். சிவகாசியிலிருந்து கிளம்பியவர்கள் பலரிடமும் (என்னையும் சேர்த்து) எடை நிறைந்த அந்தப் பைகளைப் பிரித்துக் கொடுத்திருந்தார். அதையும் சேர்த்து நாங்கள் சுமந்திருந்தோம். இரண்டு நாட்களுக்குப் பின்னர் வியட்நாம் உணவை அருந்தி விட்டு நம்மூர் கடலைமிட்டாயும், அவல் சீடையும் உடனுக்குடன் காலியானது தனிக்கதை!

இரவு 9 மணிக்கு ஆரம்பித்த விமான நுழைவுச் சீட்டு பெறும் வரிசை 2 மணிநேரமாக நத்தை வேகத்தில் நடைபெற்றது. வியட்ஜெட் விமானப் பணியாளர்கள் மிக மெதுவாக நடந்து கொண்டது ஆச்சரியத்தையும் எரிச்சலையும் ஏற்படுத்தியது. பின்னர் சுங்க அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புச் சோதனைகளுக்குப் பின்னர் ஒரு வழியாக விமானத்தில் ஏறுவதற்காக அதிகாலை 12 மணிக்கு வந்தால்

விமானம் 2 மணி நேரம் தாமதம் என்ற செய்தியால் அயர்வும் அடுத்தடுத்த பயணத் திட்டம் பாதிக்குமே என்ற கவலையும் அனைவருக்கும் தொற்றிக் கொண்டது. இருந்தாலும் அன்றைய பகல் பயணத்தில் காரணமாக ஏற்பட்ட அசதியால் கிடைத்த இடத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தனர். பின்னர் ஒருவழியாக எங்கள் வியட்நாம் பயணம் வியட்ஜெட் VJ884 விமானத்தில் துவங்கியது. மும்பையிலிருந்து நாங்கள் முதலில் சென்ற ஹோ சி மிங்ஹ் நகரம் வான்வெளியில் 3740 கி.மீ. தூரம் ஆகும். நமக்கும் வியட்நாமுக்கும் சரியாக 1.30 மணிநேரம் அதிகமாகும். அதாவது நமக்கு காலை 6 மணி என்றால் அங்கே காலை 7.30. கிழக்காசிய நாடு என்பதால் சூரியன் சீக்கிரமே உதித்து விடுகின்றான். அதனாலோ என்னவோ சீக்கிரமே அங்குள்ள மக்களும் சுறுசுறுப்பாகக் கிளம்பி விடுகின்றனர். அதேபோல் சீக்கிரமே ஊரும் அடங்கி விடுகின்றது.

04-11-2022 சைகோன்/ஹோ சி மின் நகரம்: (முதல் நாள்)

நகரம் பற்றிய சிறுகுறிப்பும் பெயர்க்காரணமும்:

ஹோ சி மின் நகரம்
Ho Chi Minh City
தான் போ ஹோ சி மின்
முன்னாள் சாய்கோன்

மாநகராட்சி

நாடு	வியட்நாம்
அமைப்பு	1698
பெயர் மாற்றம்	1976
அரசு	
• வகை	மாநகரசபை
• மக்கள் அமைப்பின் தலைவர்:	லே ஹொவாங் குவான்
பரப்பளவு	
• மொத்தம்	809 sq mi (2,095 km²)
ஏற்றம்	63 ft (19 m)
மக்கள்தொகை (2006-நடுப்பகுதி)	
• மொத்தம்	6,424,519
• அடர்த்தி	7,943/sq mi (3,067/km²)
தொலைபேசி குறியீடு	+84 (8)
இணையதளம்	http://www.hochiminhcity.gov.vn/

ஹோ சி மின் நகரம் (Ho Chi Minh City, வியட்நாமிய மொழி: Thành phố Hồ Chí Minh) என்பது வியட்நாமின் மிகப்பெரிய நகரமாகும். 17ம் நூற்றாண்டில் வியட்நாமுடன் இணைக்கப்படும் வரை இந்நகரம் கெமர் மொழியில் "பிறே நொக்கோர்" என்ற பெயரில் கம்போடியாவின் முக்கிய துறைமுக நகரமாக விளங்கியது. இது பின்னர் சாய்கோன் என்ற பெயரில் பிரெஞ்சுக் குடியேற்ற நாடான கோச்சின்சீனாவின் தலைநகராக விளங்கியது. 1954 முதல் 1975 வரையில் தென் வியட்நாமின் தலைநகராக இருந்தது. மே 1, 1975 இல், சாய்கோன் அதன் அயல் மாகாணமான 'கியா டின்' உடன் இணைக்கப்பட்டு வியட்நாமியக் கம்யூனிசத் தலைவர் ஹோ சி மின் அவர்களின் நினைவாக ஹோ சி மின் நகரம் எனப் பெயரிடப்பட்டது. ஆனாலும் நகரின் குடிமக்கள் பலரால் இன்னமும் இது "சாய்கோன்" என்ற பெயரிலேயே அழைக்கப்படுகிறது.

நகரின் நடுப்பகுதி சாய்கோன் ஆற்றுக் கரையில் உள்ளது. தென் சீனக் கடலில் இருந்து 60 கிலோமீட்டர் (37 மை) தூரத்திலும் வியட்நாமின் தலைநகர் ஹனோய் நகரில் இருந்து 1,760 கிலோமீட்டர் (1,094 மை) தூரத்தில் உள்ளது.

ஹோ சி மின் (Hồ Chí Minh மே 19, 1890 – செப்டம்பர் 2, 1969) வியட்நாமின் புரட்சித் தலைவராக இருந்தவர், பின்னர் வடக்கு வியட்நாமின் பிரதமராகவும் (1946–1955), அதிபராகவும் (1946–1969) இருந்தவர்.

ஹோ வியட் மின் விடுதலை இயக்கத்தை 1941 இலிருந்து முன்னின்று நடத்தி, 1954 இல் பிரெஞ்சுப் படையினருடன் சண்டையிட்டு வெற்றி பெற்றார். அவ்வெற்றி அவருக்கு கம்யூனிச நாடாக வடக்கு வியட்நாமை அமைக்க உதவியது. வியட்நாம் போரை அவரது இறப்பு வரையில் முன்னின்று நடத்தினார். ஆறு ஆண்டுகளின் பின்னர் வட வியட்நாமின் வெற்றியுடன் போர் முடிவுக்கு வந்ததுடன் இரண்டு வியட்நாம்களும் ஒன்றிணைந்தன. தெற்கு வியட்நாமின் தலைநகராயிருந்த ***சாய்கோன்*** *(Saigon)*

நகரம் ஹோவின் நினைவாக ஹோ சி மின் நகரம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. (நன்றி: விக்கிபீடியா)

அதிகாலையில் சென்று இறங்கி விடுதியில் சற்று இளைப்பாறிக் காலைச் சிற்றுண்டியை நிறைவு செய்து பின்னர் நகர்வலம் கிளம்பலாம் என்ற பயணத் திட்டம் விமானம் காலதாமதமானதால் மாற்றமடைந்து சில இடங்களைப் பார்க்காமல் விடுவது என்று முடிவானது.

வியட்நாமின் நாணயமான டாங் பற்றி இங்கே சொல்லியே ஆகவேண்டும். அமெரிக்க 1 டாலர் = 24600 டாங் ஆகும். நமது பணத்தில் கிட்டத்தட்ட 1 ரூபாய் = 300 டாங் ஆகும். எனவே அங்கே எல்லாப் பொருட்களும் லட்சத்திலேயே மதிப்பிடப்படுகின்றன. அங்கிருக்கும் பணநோட்டுக்களில் பூஜ்ஜியத்திற்கு மட்டும் குறைவே இல்லை எனலாம். டாங்கின் மதிப்பில் அனைவருமே லட்சாதிபதிகள் ஆகிவிடுவார்கள்! எனவே செலவளிக்கும் போதெல்லாம் அமெரிக்க டாலரிலோ அல்லது இந்திய ரூபாயிலோ மாற்றிக் கணக்கிட்டுச் செலவளிப்பது சற்றுக் கடினமாகவே இருந்தது எனலாம். ஆறுதலாகச் சில தெருவோர வியாபாரிகள் இந்திய ரூபாயைப் பெற்றுக் கொண்டதும் ஆச்சரியமாகவும் மகிழ்வாகவும் இருந்தது.

இப்போதெல்லாம் நம்மால் கைபேசி இல்லாமலும், கைபேசி இணைப்பு இல்லாமலும் உயிர்வாழ இயலாத அளவுக்கு அடிப்படைத் தேவையாகி விட்டபடியால் விமான நிலையத்தில் இறங்கியதுமே முதல் வேலையாக அலைபேசி இணைப்பும் இணைய இணைப்பும் கொண்ட சிப்பத்தைப் பெறுவதற்கு அனைவரும் முண்டியடித்துக் கொண்டு சென்றோம்! தினமும் 5 ஜிபி 4ஜி இணைய இணைப்புடன், உள்வரும் அழைப்புகளும், உள்நாட்டு அழைப்புகளும் இலவசமாக ஒரு வாரம் வைத்திருப்பதற்கு 300000 டாங் ஆயிற்று. நம்மூர்ப் பணத்திற்கு 1000 ரூபாய். டாலரைத் தேவையான அளவுக்கு டாங் ஆக மாற்றிக் கொள்வதும் நடைபெற்றது. ஒருவழியாக அனைத்தும் முடிவுற்று விமானநிலையத்திலிருந்து வெளியேறி வந்தால் அங்கே எங்கள் வழிகாட்டி ஆன்டி பேருந்துடன் காத்திருந்தார்.

ஒன்று சொல்லியே ஆக வேண்டும். எங்கு சென்றாலும் நட்சத்திர அந்தஸ்துள்ள விடுதிகள், குளிரூட்டப்பட்ட பேருந்து, முடிந்த வரை இந்திய உணவகங்கள் என்று பஹாவுதீன் அழைத்துச் சென்றதால் பயணம் முழுமையும் சுகமான அனுபவமாக இருந்தது என்பதை ஒப்புக் கொள்ள வேண்டும். உணவு விஷயத்தில் பஹாவுதீனின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எவ்வளவு உதவியது என்பதைப் பின்பொரு சமயத்தில் பார்ப்போம். ஒருவழியாக நாங்கள் தங்க வேண்டிய பாரகன் சாய்கோன் விடுதிக்கு வந்து சேரும் போது மணி 11 ஆகிவிட்டது. அனைவரும் குளித்துக் கிளம்பி மதிய உணவுக்கும் சுற்றிப் பார்ப்பதற்கும் தயாராக வேண்டும் என்று கூறியதால் கிளம்ப ஆரம்பித்தோம். அனைவருக்கும் இருவர் தங்கும் அறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மொத்தப் பயணத்தின் போதும் என்னுடன் மூர்த்தி சார் தங்கியிருந்தார். அவருடன் பல்வேறு பயணங்கள் மேற்கொள்வதால் இயல்பாக இருந்தது!

அனைவரும் கிளம்பி மதியம் 1.30 மணியளவில் மக்கள் நெருக்கடி மிகுந்த ஒரு சாலையில் இருக்கும் ஷாஃப்ரான் இந்திய உணவகத்திற்குச் சென்று மதிய உணவாக வட இந்திய உணவு வகைகளைச் சாப்பிட்டோம். உணவகத்தின் உரிமையாளர் இந்தியராக இருந்த போதும், பணியிலிருந்தவர்கள் வியட்நாம் நாட்டைச் சார்ந்தவர்களாகவே இருந்தார்கள். மிகவும் குறுகலான உணவகமாகவே இருந்தது. அனைவரும் முதல் மாடியில் நெரிசலினூடே உணவருந்தினோம்.

மதியம் 3 மணியளவில் போர் எச்சக் கூறுகளின் அருங்காட்சியகத்திற்குச் (War Remnants Museum) சென்றோம். அங்கே செல்வதற்கு முன்பாகவே பேருந்தில் அவர்களது நாட்டில் நடைபெற்ற பல்வேறு போர்களைப் பற்றி விளக்கிக் கூறினார் வழிகாட்டி ஆன்டி. வியட்நாம் நாட்டில் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க போரைப் பற்றியும், அதில் எவராலும் வெல்ல முடியாது என்று நினைத்த அமெரிக்கப் படைகளே பின்வாங்கிய நிகழ்வுகள் பற்றியும், வேதியியல் நச்சு அமிலமான ஏஜெண்ட் ஆரஞ்ச் எனும் திரவத்தைக் கொண்டு அமெரிக்கப் படைகள் தாக்கியதைப் பற்றியும், அதனால் நாடே சிதிலமடைந்ததைப் பற்றியும் வழிகாட்டி விளக்கும் போது திகிலாகவும், கடந்த 50 ஆண்டுகளில் நாடு பெற்றிருக்கும் வளர்ச்சி குறித்த பிரமிப்பும் கலந்த ஒரு உணர்வோடு தான் அருங்காட்சியகத்திற்குள் நுழைந்தோம். போரில் யார் வெற்றி பெற்றாலும் பாதிக்கப்படுவது என்னவோ பொதுமக்கள் தான் என்ற அவல நிலையை எங்கும் காண முடிகின்றது. இருந்தாலும் சமகாலத் தலைமுறை இளைஞரான எங்கள் வழிகாட்டி, ''நாங்கள் அமெரிக்கா எங்களை அழித்ததை மறக்கமாட்டோம். ஆனால் மன்னித்து விட்டோம்'' என்று கூறிய போது சற்று நெகிழ்ச்சியாகத் தான் இருந்தது. அதற்குக் காரணம் இன்றளவும் பாதிக்கப்பட்ட வியட்நாமியர்களுக்கு பிரான்ஸ் நீதிமன்றம் மூலம் அமெரிக்கா தகுந்த நட்டஈடு வழங்கி வருவதும் ஆகும்.

வியட்நாம் போர் Vietnam War	
 போரின் முடிவு: வியட் கொங் T-54 தாங்கி ஏப்ரல் 30, 1975 இல் அதிபர் மாளிகையின் வாயிலை உடைத்தெறிந்து முன்னேறுகிறது.	
நாள்	டிசம்பர் 1956 – ஏப்ரல் 30, 1975
இடம்	தெற்கு வியட்நாம், வடக்கு வியட்நாம், கம்போடியா, லாவோஸ், தாய்லாந்து
	வட வியட்நாமின் வெற்றி, அமெரிக்கா மற்றும் தென் வியட்நாம் தோல்வி; தென் வியட்நாம் கலைப்பு; வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியில் வியட்நாம் ஒன்றுபடல் லாவோசில் கம்யூனிச ஆட்சி கம்போடியாவில் கெமர் ரூச் ஆட்சி.
நிலப்பகுதி மாற்றங்கள்	வட மற்றும் தென் வியட்நாம் ஒன்றிணைக்கப்பட்டு வியட்நாம் சோசலிச குடியரசு உருவாக்கப்பட்டது.

இனி, நடந்து முடிந்த போரைப் பற்றியே பேசி நமது சுற்றுலாவின் சுவாரசியத்தை வீணடிக்காமல் மேலும் வியட்நாம் போர் பற்றிய விபரம் வேண்டுவோர் இங்கே சென்று காணலாம் என்று சுருக்கமாக முடித்து விட்டு நம் பயணத்தைத் தொடரலாம்.

இந்த அருங்காட்சியகத்தின் வெளியே போரின் ஆயுதங்களிலிருந்து உருக்கி எடுக்கப்பட்ட ஒரு சமாதான மணி இருக்கின்றது. அதை அனைவரும் ஒலித்து சமரசத்தையும் சமாதானத்தையும் வலியுறுத்தினோம். வழிகாட்டியின் ஆலோசனையின்படி அருங்காட்சியகத்தின் இரண்டாம் மாடியிலிருந்து ஒவ்வொரு மாடியாகக் கீழே இறங்கி வந்தோம். இரண்டாம் மாடியில் போரில் இறந்த போரைப் புகைப்படமாகப் பிடிக்கச் சென்ற பத்திரிகையாளர்களின் உலகப் புகழ்பெற்ற படங்கள் இருந்தன. அவை அன்றைய அவலநிலையை எடுத்துக் காட்டின. இன்றிருப்பது போல் அன்றும் சமூக ஊடகங்கள் இவ்வளவு இருந்திருந்தால் எப்படி இருக்கும் என்ற எண்ணத்தை உருவாக்கியது.

முதல் மாடியில் போரில் பயன்படுத்திய பல்வேறு பயங்கர ஆயுதங்களையும், துப்பாக்கி ரவைகளையும், எரி(றி)குண்டுகளையும் அடுக்கி வைத்திருந்தார்கள். தரைத் தளத்தில் அமெரிக்காவிலேயே போருக்கு எதிராக இயக்கங்கள் நடத்தியும் பத்திரிகை, கூட்டங்கள் நடத்தியும் எதிர்க்குரல் கொடுத்தவர்களின் செயல்பாடுகள் பட்டியலிடப்பட்டு, பின்னர் எவ்வாறு போர் முடிவுக்கு வந்தது என்று தெரியச் செய்திருந்தார்கள்.

அருங்காட்சியகத்தின் வெளியே சிறை பிடிக்கப்பட்ட அமெரிக்க அசல் டாங்கிகள், போர் விமானங்கள் ஆகியவற்றை நிறுத்தி வைத்திருந்தனர். உண்மையிலேயே போரின் எச்சங்களை ஒரு அருங்காட்சியகமாகக் கண்ட திருப்தியுடன் வெளியேறினோம்.

அடுத்ததாக நகரின் மையத்திலிருந்த சீன தேசத்தினர் வழிபடும் சொர்க்கத்தின் மன்னர் *(Jade Emperor Pagoda)* சீனக் கோவிலுக்குச் சென்றோம். அங்கே வாசனை மிகுந்த பத்தியும், அழகழகான வரிசையான தீபங்களும் ஏற்றி *(அவை ஸ்வஸ்திக் வடிவில் இருந்தன!)* மிகுந்த பயபக்தியுடன் வழிபட்டுக் கொண்டிருந்தனர். புகைப்படங்கள் எடுப்பதற்குத் தடையேதும் இல்லை எனவே அனைவரும் புகைப்படங்கள் எடுத்தோம். கோவில் சிறிய இடத்தில் கட்டப்பட்டிருந்தாலும் சீனக் கட்டிடக் கலை மிளிரக் கட்டப்பட்டிருந்தது. மிகவும் சுத்தமாகப் பராமரிக்கப்பட்டிருந்தது. அழகான மலர்ச்செடிகளும், மிகப் பெரிய மீன் தொட்டியின் நடுவே புத்தர் சிலையும் என மிக அழகாக இருந்தது.

அடுத்ததாக வியட்நாமின் *1891* வாக்கில் கட்டப்பட்ட பழம்பெரும் கட்டிடமான தபால் நிலையத்திற்குச் சென்றோம். வெளியிலிருந்து அனைவரும் புகைப்படமும் எடுத்துக் கொண்டோம். தெருவோர விற்பனையாளர்கள் எங்களைச் சூழ்ந்து கொள்ள ஆளாளுக்கு வியட்நாம் பெயரிட்ட துணிப்பைகள் வாங்கினோம். இந்தியப் பணத்தையும் பெற்றுக் கொண்டதால் வசதியாக இருந்தது.

அங்கிருந்து சாய்கோன் நகரின் இந்துக் கோவிலில் ஒன்றுக்குச் செல்லப்போகின்றோம் என்று வழிகாட்டி சொன்னவுடன் ஆர்வமாக இருந்தோம். ஆனால் நாங்கள் செல்வதற்குள் கோவில் பூட்டப்பட்டு விட்டது. அங்கே சென்றதும் தான் தெரிந்தது அது நமது தமிழ்க்கடவுள் முருகன் கோவில் என்று! கோவில் பூட்டப்பட்டிருந்தது மிகுந்த ஏமாற்றமாக இருந்தது.

இவ்விடத்தில் வியட்நாமியர்களைப் பற்றி எனது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கின்றேன். நான் பார்த்த வரையில் வியட்நாமியர்கள் சற்றே குள்ளமாகவும் ஒல்லியான உடல்வாகுடனும் இருக்கின்றார்கள். இல்லிக் கண்களுடன், உருண்ட மூக்குடன், வெளிர் சிவப்பு நிறத்தில் இருக்கின்றார்கள். ஏற்கனவே குறிப்பிட்டது போல் அதிகாலையில் வேலைக்குக் கிளம்புகின்றார்கள் இரவு *6* மணி முதல் *7* மணிக்குள் இரவு உணவை முடித்து விடுகின்றார்கள். *8* மணிக்குள் பாதிக்கும் மேலான கடைகள் அடைக்கப்பட்டு விடுகின்றன. பெரும்பாலான கடைகளில் பெண்களையே காண முடிகின்றது. உடல் பருமனானவர்கள் தேடினாலும் கிடைக்கவில்லை. மிகப் பெரிய எண்ணிக்கையில்

மருத்துவமனைகளையும் காண முடியவில்லை. எங்கள் 5 நாள் பயணத்தில் இரண்டே முறை தான் ஆபத்துதவு ஊர்தியைக் காணமுடிந்தது. 80 சதவீதம் பேர் இருசக்கர வாகனங்களிலேயே பயணம் செய்கின்றனர். நமது பழைய மாதிரி பஜாஜ் M80 போன்ற வாகனங்கள் அவர்களது உயரத்திற்கேற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. அதிலும் பத்துக்கு ஒரு வண்டி ஹோண்டா நிறுவனத்தின் தயாரிப்பாக இருந்தது. இன்னும் மின்னணு வாகனங்கள் பெரிய அளவில் பயன்பாட்டிற்கு வரவில்லை. வியட்நாமிய மொழிக்கென்று வரிவடிவம் பழங்காலத்தில் சீன எழுத்தினைச் சார்ந்தே இருந்தது என்றும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் பின்னர் இலத்தின் மொழிவடிவைப் பெற்றது என்றும் படித்துத் தெரிந்து கொண்டேன். தற்போது நமது நாட்டின் இளைஞர்கள் சமூக வலைதளங்களில் எழுதிவரும் தமிழை விழுங்கி வரும் திமிங்கலமான தமிங்கிலத்தைப் போல் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

விரைவில் சந்தையை மூடிவிடுவார்கள் என்பதால் ஒரு மணி நேரத்துக்கும் உள்ளான காலக்கெடுவுடன் எங்களை பென் தான் (Bến Thành Market) சந்தையில் இறக்கிவிட்டார் ஆன்டி. 1912ல் கட்டப்பட்டு 100 ஆண்டுகளைக் கடந்த இந்த மிகப் பெரிய சந்தையில் 6000 கடைகளுக்கு மேல் இருக்கின்றன. பெரும்பாலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வண்ணம் கண்கவர் உபகரணங்கள், ஆடைகள், அழகுப் பொருட்கள் எனக் குவிந்து கிடந்தது. அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூட்டை போல் சிதறி அனைவரும் பலவித கடைகளுக்கும் விட்டிலைப்(!) போல் படையெடுத்தனர். வியட்நாமின் மிகவும் புகழ்பெற்ற இளநீர் மிக இனிமையாகவும் சுவையாகவும் இருந்தது.

7 மணி வாக்கில் கடைகளைப் பூட்ட ஆரம்பித்து விட்டபடியால் அங்கிருந்து கிளம்பி தமிழ்நாட்டு உணவகமான வாழை இலை உணவு விடுதிக்குச் (Banana Leaf Restaurant) சென்று அங்கே தென்னிந்திய இரவு உணவைத் திருப்தியுடன் உண்டு முடித்தோம். பின்னர் நாங்கள் தங்கியிருந்த பாரகன் சாய்கோன் விடுதிக்கு வந்து சேர்ந்தோம். முருகன் கோவில் பூட்டியிருந்து நம்மால் காண முடியாமல் போனது மட்டும் ஒரு குறையாக மனதில் இருந்தது. மறுநாள் காலை ஏழு மணிக்குள் காலை உணவை முடித்து விட்டுச் சீக்கிரம் கிளம்ப வேண்டும் என்றும், அடுத்த மாநிலத்திற்குச் சென்று விவசாயப் பண்ணை மற்றும் ஆற்றுப் படகுச் சவாரி செய்ய வேண்டும் என்று வழிகாட்டி வலியுறுத்திச் சென்றார். நாங்களும் வெகுவிரைவில் படுக்கைக்குச் சென்று நித்திரையில் ஆழ்ந்தோம்.

05-11-2022 சனிக்கிழமை: (2ம் நாள்)

அதிகாலை 6 மணியளவில் நன்றாகத் தூங்கி எழுந்ததால் அனைவரும் மலர்ச்சியுடன் காலை உணவைச் சாப்பிடச் சென்றோம். காலையில் பழங்கள், ரொட்டி, ஜாம், பழச்சாறுகள் ஆகியவை சுவையாக இருந்தன. அசைவப் பிரியர்களுக்கு என்று முட்டை ஆம்லெட் போன்றவைகளும் இருந்தன. அனைவரும் நன்றாகச் சாப்பிட்டுப் பின் 8 மணியளவில் பேருந்தில் ஏறினோம்.

பேருந்தில் ஏறியதுமே கிரிதர் சார் கொண்டு வந்த கடலைமிட்டாய், அவல், சீடை ஆகியவற்றை அனைவருக்கும் விநியோகிக்க ஆரம்பித்து விடுவார்கள் சின்னத் தம்பி, பெரிய தம்பி என்று எல்லோராலும் பாசத்துடன் அழைக்கப்பட்ட ராஜபிரதீபனும், வசந்த்தும். இருவரும் துடிப்பு மிக்க இளைஞர்கள். சமீபத்தில் பட்டயக்கணக்காளர் படிப்பு முடித்தவர்கள். இந்தச் சுற்றுலாவைக் கலகலப்பாக்கியதில் அவர்களின் பங்கும் அளவிடமுடியாதது. நாங்கள் தங்கியிருந்த விடுதியிலிருந்து 74 கி.மீ. தொலைவிலிருக்கும் பக்கத்து மாகாணத்தில் Bến Tàu du lịch Mỹ Tho- Hotline என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கிருந்து மோட்டார் படகில் ஏறி ஆற்றில் பயணித்தோம். நாங்கள் அனைவரும் ஏறும் அளவுக்கு அந்தப் படகு கனகச்சிதமாக வடிவமைக்கப்பட்டிருந்தது. அதை ஒரு வியட்நாமியப் பெண்மணி நேர்த்தியாக இயக்கினார். அவரின் பத்து வயது மதிக்கத் தக்க சிறுவன் ஆரம்பம் முதல் கடைசி வரை அலைபேசியில் விளையாடிக் கொண்டே வந்த காட்சி அடுத்த தலைமுறை இளைஞர்கள் என்னாவார்களோ என்று (நம் முன்னோர்களும் நம்மைப் பற்றி அப்படித் தான் நினைத்திருப்பார்கள்!) நினைக்கத் தூண்டியது.

5 கி.மீ. தொலைவு படகில் செல்லும் வழியில் ஓடப் பாடல் பாடுவதும் புகைப்படங்கள் எடுப்பதுமாகக் களை கட்டியது. சாய்கோன் ஆறு மிகவும் ஆழமாகவும், அகலமாகவும், நதிவெள்ளம் ஓடிக் கொண்டும் அற்புதமாகக் காணக் கண்கொள்ளாத காட்சியாக இருந்தது. ஒரு நாட்டின் மற்றும் மனிதகுல வளர்ச்சிக்கு நதிகளின் பங்கு எவ்வளவு முக்கியமானது என்பதை சாய்கோன் நதி பறைசாற்றிக் கொண்டிருந்தது. அங்கிருந்து வயல்வரப்போரமாகவே எங்களை நடத்தி அழைத்துச் சென்றார் ஆன்டி. வியட்நாமியக் கிராமப்புறத்தைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. நடந்து சென்று டுப்டுப் எனப்படும் வண்டியில் வண்டிக்கு எட்டு பேர் என்ற எண்ணிக்கையில் ஏறிச் சென்றோம். இதைக் காணாத வெளிநாட்டினருக்கு வேண்டுமானால் புதுமையாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

டுப்டுப்லிருந்து இறங்கி ஒரு தேங்காய் உரிக்கும், மிட்டாய் தயாரிக்கும், ஒயின் தயாரிக்கும், தொழிலகம்/விடுதி/கடையில் சென்று அவர்கள் எவ்வாறு உழைக்கின்றார்கள் என்று பார்வையிட்டோம். அனைவருக்கும் பலாச்சுளை, டிராகன் பழம், பப்ளிமாஸ் போன்ற பழங்களை அழகாக நறுக்கி வைத்திருந்தார்கள். சுடச்சுடத் தேநீரும் வழங்கப்பட்டது. அனைவரும் ஆர்வமாக அருந்தி மகிழ்ந்தோம். அங்கிருந்த கடையில் மரத்தில் உருவாக்கப்பட்ட பல பொருட்களை அனைவரும் வாங்கினார்கள். பின் அங்கிருந்து நடந்து நதியின் வாய்க்கால் உருவாக்கியிருக்கும் சதுப்பு நிலப் பகுதியில் நால்வர் ஏறும் நீளமான ஓடத்தில் ஏறிச் சென்றோம். வியட்நாமியப் பெண்மணி ஒருவர் எங்கள் ஓடத்தைக் கழியால் தள்ளிச் செலுத்தினார். அவர் நதியின் நீரின் எதிர்திசையில் ஆங்காங்கே இருக்கும் மரக்கிளைகளைப் பயன்படுத்தி எவ்வாறு வேகமாகவும் லாவகமாகவும் செலுத்தினார் என்பது ஆச்சரியமாக இருந்தது என்றால், அந்த வாய்க்கால் எவ்வாறு மிகக் குறுகலாகவும் நாணல், தென்னை போன்ற இலை கொண்ட மரங்கள் இருபுறமும் அடர்த்தியாகக் கொண்டு கதிரவனே கண்ணுக்குத் தெரியாத அளவில் பசுமையாக இருந்தது என்பதும் வியப்பாக இருந்தது.

ஓடத்திலிருந்து கரைக்கு ஏறி மீண்டும் படகுத்துறைக்குச் செல்லும் வழியில் தண்ணீர் வெள்ளமாக ஓடியிருந்ததால் அனைவரும் தங்கள் மிதியடியைக் கழற்றி நீருக்குள் இறங்கி நடக்க வேண்டியிருந்தது. அவ்வாறு நடந்தே எங்கள் வியட்நாமிய மதிய உணவு விடுதிக்கு வந்து சேர்ந்தோம். சுடச் சுட வியட்நாமிய பசை போன்ற அரிசிச் சோறு கிடைத்தாலும் அசைவ உணவருந்துபவர்களுக்கு வசதியாக கோழிக்கறியும், மீன் வகைகளும் கிடைத்தன. என்னைப் போன்ற சைவ உணவு அருந்துபவர்களுக்குத் தான் மிகவும் கடினம். பசி ஒருபுறமிருக்க, எதைச் சாப்பிடுவது என்றும் தெரியாமல் பேந்தப் பேந்த விழித்துக் கொண்டிருந்தோம்.

ஏற்கனவே பஹாவுதீனைப் பற்றிப் பின்னொரு சந்தர்ப்பத்தில் காண்போம் என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? இவ்வாறு ஆகும் என்று தெரிந்தே ஆபத்பாந்தவனாக பஹாவுதீன் ஊரிலிருந்தே உடனடி ரசச் சேர்க்கையையும், புளிக்குழம்புச் சேர்க்கையும், மாங்காய் ஊறுகாயும் நிறைய எடுத்து வந்திருந்தார்! கொதிக்கும் நீரில் தகுந்த அளவில் ரசச் சேர்க்கையைக் கலக்கி உப்புப் போட்டு அனைவருக்கும் பக்குவமாகச் செய்து தந்து அனைவரின் பாராட்டையும் பெற்றார் திருமதி யமுனா நாகேஸ்வரன் அவர்கள். ஒரு வழியாக வேறுவழியின்றி அனைவரும் வியட்நாமிய உணவருந்தி மீண்டும் அங்கே எங்களுக்காகக் காத்திருந்த படகில் ஏறி எங்கள் பேருந்துக்குத் திரும்ப ஆரம்பித்தோம். படகில் வயதையும் தங்களையும் மறந்து பலவித பாடலுக்கு ஆடி தாங்களும் மகிழ்ந்து அனைவரையும் மகிழ்வித்தனர் சிலர். அவர்கள் யாரென்பதை வாசகர்களின் ஊகத்திற்கே விட்டுவிடுகின்றேன்! செல்லும் போது 5 கிமீ தூரமே படகில் வந்தோம். திரும்பி வரும் போது அது 11 கி.மீ. ஆயிற்று. மீண்டும் பேருந்து நின்ற இடத்திற்கு வரும் போது மாலை 4 மணி ஆயிற்று. இவ்வாறு இன்றைய தினம் மிகவும் அருமையாகச் சென்றது.

சாய்கோன் நகருக்குத் திரும்பி வரும் வழியில் பொழுதைப் பயனுள்ள வழியில் கழிக்கும் முகமாக அனைவரும் ஒவ்வொருவரையும் தங்களைத் தாங்களே அறிமுகப்படுத்திக் கொண்டனர். அது ஒரு அறிமுகப்படலாமாக இல்லாமல் தங்கள் வாழ்க்கையைத் தாங்களே ஒரு முறை திரும்பிப் பார்த்து தங்கள் கதையைச் சொல்வது போல் இருந்ததால் மிகவும் சுவாரசியமாக இருந்தது. அதுவும் தம்பதியர்களாக வந்தவர்களை அனைவரும் கலாய்த்தது முத்தாய்ப்பாக இருந்தது. சிறுவர் முத்துக்கருப்பன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் மகிழ்வைத் தந்தது. இவ்வாறு கலகலப்பாகச் சென்றதால் அந்தி நேரப்பொழுதில் மீண்டும் சாய்கோன் நகரத்திற்கு 75 கி.மீ. தூரம் பயணம் செய்த களைப்பே இல்லை என்றே சொல்லலாம்.

ஒரு மாற்றமாக இருக்கட்டும் என்று நேற்று மதியம் உணவருந்திய இடத்தில் இன்று இரவு உணவும், நேற்று இரவு உணவருந்திய இடத்தில் மறுநாள் மதிய உணவும் அருந்தட்டும் என்று அமைப்பாளர்கள் கருதினார்கள் போலும், மீண்டும் ஷாஃப்ரான் இந்திய உணவகத்தில் இரவு உணவு சாப்பிட்டு முடித்தோம். அங்கே மிகவும் தரமான வறுத்த முந்திரிப்பருப்பு வட்டமான வடிவக் கண்ணாடிப் பேழையில் 5 அமெரிக்க டாலருக்குக் கிடைத்தது. அனைவரும் வாங்கினோம். பின்னர் மீண்டும் காலை 8 மணிக்குள் பேருந்தில் ஏற வேண்டும் என்ற காலக்கெடுவோடு விடுதிக்குத் திரும்ப அழைத்துச் சென்றார் எங்கள் வழிகாட்டி.

அங்கிருந்து சிலர் இரவில் இயங்கும் சந்தைக்கும், அலுப்பு தீரப் பிடித்து விடும் மசாஜ் மையங்களுக்கும் சென்றனர். முருகன் கோவிலைப் பார்க்க முடியாமல் போனது குறித்த கவலை தெரிவித்துக் கொண்டே திருமதி மீனாட்சி கலைராஜன் அவர்கள் இருந்ததாலும் எனக்கும் முருகன் கோவிலுக்குச் செல்லும் ஆர்வம் அளவுக்கதிகமாக இருந்ததாலும் அதிகாலை 5 மணிக்கே எழுந்து 6 மணியளவில் கோவிலுக்கு வருபவர்கள் வரலாம் என்று முடிவு செய்து கொண்டு சீக்கிரம் தூங்கச் சென்றோம்.







06-11-2022 ஞாயிற்றுக்கிழமை (3ம் நாள்)

ஏற்கனவே திட்டமிட்டபடி அதிகாலை 5 மணிக்கே எழுந்து 6 மணிக்குள் கிளம்பி கீழே வரவேற்பறைக்கு வந்தோம் நானும் மூர்த்தி சாரும். அங்கே எங்களுக்கு முன்பே ஆர்வத்துடன் தயாராக இருந்தனர் திருமதி மீனாட்சி கலைராஜன், கீதா ஜெயசீலன், கிரிதர் சார் மற்றும் அனுராதா ஆகியோர். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. வரவேற்பறையில் இருந்த பணியாளர் உடனே ஒரு வாடகை மகிழ்வுந்தை ஏற்பாடு செய்தார். அதில் அனைவரும் ஏறி 1 கி.மீ. தூரத்திலேயே இருந்த முருகன் கோவிலுக்குச் சென்றோம். அங்கே சென்றதும் தான் நம்மூர்க் கோவில்கள் போலல்லாமல் காலை 10 மணிக்குத் தான் கோவில் திறக்கப்படும் என்ற செய்தி தெரிந்தது. முன்கூட்டியே அறிந்து கொள்ளாமல் அனைவரையும் விரைவில் கிளப்பி விட்டுவிட்டோமே என்ற தர்மசங்கடம் ஏற்பட்டது. சரி நாங்கள் அதிகாலை நடைபயணம் மேற்கொள்வது போல் நடந்து செல்கின்றோம் என்று மூர்த்தி சார், கிரிதர் மற்றும் அனுராதா ஆகியோர் சென்று விட, நடக்க முடியாத திருமதி மீனாட்சி அவர்களை நான் அழைத்து வருகின்றேன் என்று கோவில் வாசலிலேயே நாங்கள் மூவரும் அமர்ந்திருந்தோம். எதிரே அதிகாலையிலேயே சுடச்சுடத் தேநீர் தயாரித்துத் தந்தார் ஒரு பெண்மணி. அதை அருந்தி விட்டு, வெளியே எழுதப்பட்டிருந்த தொலைபேசி எண்ணுக்கு அழைத்துக் கோவில் 10 மணிக்கே திறக்கப்படும் என்ற செய்தியை உறுதி செய்து விட்டு, நாங்கள் மீண்டும் மிகுந்த ஏமாற்றத்துடன் கிளம்பித் திரும்ப விடுதிக்கே வந்து சேர்ந்தோம். அங்கே அனைவரும் காலை உணவை அருந்திக் கொண்டு தயாராகிக் கொண்டு இருந்தனர். நாங்களும் உணவருந்தித் தயாரானோம்.

இன்றைய பயணத்தை முடித்து விட்டு மாலையில் விமானம் ஏறி தலைநகருக்குச் செல்ல வேண்டி இருந்ததால் எங்கள் அறையைக் காலி செய்து விட்டு எங்கள் பைகள் மற்றும் சுமைகளுடன் காலை எட்டு மணிக்கு மீண்டும் பேருந்தில் ஏறினோம். சுமார் 45 கி.மீ. தொலைவில் இருந்த க்யூ சி பதுங்குகுழிகளைப் பார்வையிடப் போகின்றோம் என்று வழிகாட்டி கூறி மீண்டும் அமெரிக்கப் போர் குறித்த தகவல்களைக் கூற ஆரம்பித்தார். அது குறித்த விளக்கங்கள் இணையம் எங்கும் கொட்டிக் கிடப்பதால் இங்கே சென்று பார்வையிடலாம்.

இந்தப் பதுங்குகுழிகள் 250 கி.மீ. அடியிலேயே கைகளால் தோண்டி சுரங்கமமைத்து கொரில்லாப் போர் முறையில் வியட்நாமிய வீரர்கள் அமெரிக்கப்படையை எதிர்த்து உருவாக்கினர் என்று வழிகாட்டி சொல்லும் போது அதன் பிரமிப்பு தெரியவில்லை. ஆனால், அந்த இடத்தையே நேரில் சென்று பார்வையிடுபவர்களுக்கு அதன் பிரமிப்பு உணரக் கிடைக்கும். எனவே அதை எழுத்தில் வடிக்க முடியாது.

எவ்வாறு வியட்நாமியர்களின் குள்ளமான உடலமைப்பு உயரமான அமெரிக்க ராணுவத்தினரைச் சுரங்கத்துக்குள் நுழையமுடியாமல் ஆக்கியது என்றும், மூன்றடுக்குகளில் எவ்வாறு சுரங்கம் நிர்மானிக்கப்பட்டது என்றும் விளக்கினார் வழிகாட்டி. போலிப் பதுங்குகுழிகளின் மூலம் வீரர்களை வீழ்த்தும் பொறிகள், தப்பித் தவறி மாட்டிக் கொண்ட வீரர்களைச் சித்திரவதை செய்யும் விதமாகவும், கொல்லும் விதமாகவும் அமைக்கப்பட்ட பொறிகள், செருப்பின் முன்புறம் பின்புறம் அறியாத வண்ணம் இருபுறமும் ஒரே வடிவில் அமைக்கப்பட்ட சமயோசிதமும் சாமர்த்தியமும், எதிரியின் குண்டுகளைக் கைப்பற்றி அதை அறுத்து அதிலிருந்து டைனமைட் மற்றும் நிலக்கண்ணி வெடிகள் வைத்ததும் ஆக, ஒரு போரின் வெற்றியைப் பெரும்படையோ ஆயுதங்களோ தீர்மானிப்பதில்லை என்றும், போர் நுண்ணறிவும், தகுந்த திட்டமிடலும், இடம் சார்ந்த அறிவும், தேசபக்தியும், உறுதியும், சிலசமயங்களில் நியாயமும் மட்டுமே காரணமாக இருக்கும் என்பதற்கு ஒரு சாட்சியாக இந்த பதுங்குகுழி பூமி திகழ்கின்றது எனலாம்.

அங்கே பலவித அளவில் துப்பாக்கிக் குண்டுகளை வாங்கிச் சுட்டுப் பார்க்கும் தளமும் இருந்தது. பலரும் துப்பாக்கி சுட்டுப் பார்த்தனர். நம்மூர் ஆரியங்காவு வெடிவழிபாடு போல் சத்தம் கேட்டுக் கொண்டு இருந்தது! பின்னர் பதுங்குகுழிக்குள் இறங்கி 300 மீட்டர் தூரம் சுரங்கப்பாதையில் செல்பவர்கள் செல்லலாம் என்றதில் சிலர் துணிந்து இறங்கிச் சென்றோம். சிலர் பாதியில் திரும்பினர். சிலர் நமக்கெதற்கு வம்பு என்று வெளியில் நின்றனர். சுற்றுலாப்பயணிகள் செல்வதற்காகச் சற்றே விரிவாக்கி வைத்திருந்ததால் அப்படியொன்றும் மிகவும் கடினமான பாதையாகத் தெரியவில்லை. இருந்த போதும் சற்றே திகிலூட்டுவதாகவே இருந்தது!

பின்னர் அங்கிருந்து கிளம்பி மீண்டும் சாய்கோன் நகரத்திற்குத் திரும்பி வருவதற்காகக் கிளம்பினோம். வரும் வழியில் முன்னாள் தலைவர் ராஜபாண்டியன் இது கல்விச்சுற்றுலா என்பதால் அதுகுறித்தும் விவாதிப்போம் என்று ஆரம்பிக்க கடமை உணர்ச்சியில் ஒவ்வொருவரும் பேச ஆரம்பித்து அது மற்றுமொரு சுவாரசியமான நிகழ்வாக அமைந்தது. பேருந்தில் சென்றதும், ஊர் வந்ததும், பசியெடுத்ததும் கூட மறந்து விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

ஏற்கனவே குறிப்பிட்ட திட்டப்படி, மதிய உணவாக தென்னிந்திய உணவகமான வாழை இலை உணவகத்துக்கு வந்து அருமையாகச் சாப்பிட்டோம். அங்கிருந்து எங்கள் அடுத்த பயணமான தலைநகருக்குச் செல்வதற்கு விமான நிலையம் செல்ல வேண்டும் என்ற பரபரப்பு தொற்றிக் கொண்டது. இருந்தாலும் எப்படியாவது முருகன் கோவிலுக்குச் சென்றே தீர வேண்டும் என்றும் கிடைக்கும் பத்து நிமிடத்தில் அனைவரும் கோவிலுக்குச் சென்று வந்து விடுவது என்றும் வழிகாட்டியிடம் கேட்க, அவரும் ஒத்துக் கொள்ள, மீண்டும் கோவிலுக்குச் செல்லப் போகின்றோம் என்ற ஆர்வம் அனைவருக்கும் வந்தது. திருமதி மீனாட்சி கலைராஜ் அவர்கள் என்னிடம் இறைவன் சோதிப்பார் ஆனால் கைவிடமாட்டார் என்று கூறியது என் காதில் இப்போதும் ஒலிக்கின்றது. சாய்கோன் நகரில் குடிகொண்டிருக்கும் சுப்பிரமணியன் எங்களுக்கும் காட்சியளித்தது ஒரு இறைசங்கல்பம் என்றே இப்போதும் தோன்றுகின்றது. கோவில் சிறிய கோவில் என்றாலும், பிரகாரம் சிறியது என்றாலும், மிக நேர்த்தியாகவும், சுத்தமாகவும் பராமரிக்கப்படுகின்றது. விநாயகர், முருகன், சிவபெருமான் என்று அனைத்து தெய்வங்களும் காட்சியளிக்கின்றனர். நவக்கிரகங்களும் இருந்தது. கிடைத்த மிகக் குறைந்த நேர அளவிலும் திருமதி யமுனா நாகேஸ்வரன் அவர்கள் இனிமையாகப் பாடியது மெய்மறக்கும்படியாகச் செய்தது. அனைவரையும் என்னைக் காணும் வண்ணம் நான் திட்டம் வைத்திருக்கும்போது, தான் மட்டுமே பார்த்தால் போதும் என்ற உனது சுயநலத் திட்டம் செல்லுபடியாகுமா என்று முருகன் புன்னகைப்பது போல் இருந்தது! மொத்தத்தில் வந்த அனைவருக்கும் அது சிலிர்ப்பூட்டும் அனுபவம் என்று சொல்ல வேண்டியதில்லை.



பின்னர் அனைவரும் விரைவில் பேருந்தில் ஏறிக் கொள்ள மாலை 3.45 மணியளவில் டான் சான் நாட் பன்னாட்டு விமானநிலையத்தின் உள்நாட்டு முனையத்தில் வந்து சேர்ந்தோம். மாலை 6 மணிக்குக் கிளம்ப வேண்டிய எங்கள் VJ150 எண்ணுடைய வியட்ஜெட் விமானம் 20 நிமிட தாமதமாகக் கிளம்பும் என்ற அறிவிப்புக் கிடைத்தது. பல விமானங்கள் வந்து செல்வதால் அந்த இடமே ஏதோ சந்தைக் கடை போல் இருந்தது! வான்வெளியில் 1160 கி.மீ. தூரம் உள்ள இரு நகரங்களுக்கிடையே எங்களின் பயணம் ஆரம்பமானது. இரவு 9 மணியளவில் வியட்நாம் தலைநகரான ஹனாய் நகருக்குச் சென்றடைந்தோம். அங்கே எங்கள் வழிகாட்டி வழக்கம்போல் சிகப்பு நிறப் பேருந்துடன் காத்திருந்தார். இரவு வெகுநேரமானதால் விடுதியிலேயே சாப்பிடும்படி அனைவருக்கும் தோசை மற்றும் சாதத்தினைப் பொட்டலமாகக் கட்டி வழங்கினார். காலை எழுந்து மீண்டும் விடுதியைக் காலி செய்து மறுநாள் சொகுசுக் கப்பலில் தங்க இருக்கின்றோம் என்று கூறினார்கள். பசி இருந்ததாலும், பயணக் களைப்பிலும் சீக்கிரமே சாப்பிட்டு விட்டு உடனே தூங்கச் சென்றோம். ஆக, தலைநகரான ஹனாயில் எங்கள் தங்கல் குறுகிய காலமே இருந்தது.





07-11-2022 ***திங்கட்கிழமை (4ம் நாள்)***



வியட்நாமின் தலைநகர் ஹனாய் என்ற பெயரைக் கேட்டதும் எனக்கு உடனே நினைவுக்கு வந்தது ஹனாயின் கோபுரங்கள் *(Towers of Hanoi)* என்ற கணினி விளையாட்டு தான். அஃதாவது இந்த விளையாட்டினை ஒருவர் மட்டுமே கூட விளையாட முடியும். ஆரம்பமும் ஒன்று தான் முடிவும் ஒன்று தான். ஆனால் மிகவும் சுவாரசியமானது! படத்தில் உள்ளவாறு மூன்று கம்பிகள் நிற்க வைக்கப்பட்டிருக்கும். இதில் மூன்று அல்லது அதற்கு மேம்பட்ட எண்ணிக்கையில் வளையங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இவ்வளையங்களில் பெரிய வளையம் கீழாகவும், சிறிய வளையம் மேலாகவும் இருக்கும். இந்த வரிசையை மாற்றாமல் ஒரு கம்பியிலிருந்து இன்னொரு கம்பிக்கு அத்தனை வளையங்களையும் கொண்டு சேர்க்க வேண்டும். விளையாட்டின் விதிப்படி ஒவ்வொரு நகர்வுக்கும் ஒரே ஒரு வளையத்தை மட்டுமே நகர்த்த முடியும். பெரிய வளையங்களுக்கு மேல் தான் சிறிய வளையங்களை வைக்க முடியும். சிறிய வளையங்களுக்கு மேல் பெரிய வளையங்களை வைக்கக் கூடாது. இடையிலிருக்கும் இன்னொரு கம்பியையும் பயன்படுத்திக் கொள்ளலாம். இது தான் ஹனாயின் கோபுரங்கள் விளையாட்டு. இதற்கு ஹனாயின் பெயர் ஏன் வந்தது என்று தேடிப் பார்த்தால் இந்தியா, பிரான்ஸ் மற்றும் வியட்நாமுக்கிடையேயான ஒரு சுவாரசியமான முக்கோணம் அறிய நேர்ந்தது.

1883 வாக்கில் இந்த விளையாட்டைக் கண்டறிந்த மிகவும் பிரபலமான கணித மேதை எட்வர்டு லூகஸ் இந்த விளையாட்டைப் பற்றி விளக்குகையில் இந்திய வாரணாசியில் இருக்கும் ஒரு கோவிலில் படைப்புக் கடவுள் பிரம்மாவின் கோபுரத்தில் இருக்கும் வைரம் கொண்டு அலங்கரிக்கப்பட்ட *64* தங்கத் தட்டுகளை அங்கிருக்கும் முனிவர்கள் ஒரு மூலையிலிருந்து கடைசி மூலைக்கு ஒவ்வொரு தட்டாக அடுக்க வேண்டும் என்றும் அவ்வாறு அடுக்கும் போது விதிப்படி பெரிய தட்டு சிறிய தட்டுக்குக் கீழே இருக்குமாறு மட்டுமே அடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு *64* தங்கத் தட்டுக்களையும் மாற்றி வைத்து விட்டால் அந்தக் கோபுரம் சரிந்து விழுந்து உலகம் அழிவதுடன் அவர்களுக்கும் கதிமோட்சம் கிட்டும் என்று சொல்லியதாகவும், அதன்பேரில் அவர்கள் ஒவ்வொன்றாக அடுக்கி வைத்துக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிடுகின்றார். கதைப்படி, முதலில் இருப்பது பிரம்ம கோபுரம் ஆகும். நடுவில் உள்ளது விஷ்ணு கோபுரம் ஆகும். கடைசியில் உள்ளது ருத்ர கோபுரம் ஆகும். படைப்பிலிருந்து அனைத்தும் ருத்ர கோபுரத்துக்குச் சென்றவுடன் சிவனின் சம்ஹாரம் நிகழ்ந்து உலகம் அழிகின்றது என்பது ஐதீகம். இடையில் விதிப்படி மாற்றி வைப்பது, நடத்திக் கொடுப்பது அனைத்தும் விஷ்ணுவின் காக்கும் கோபுரம் ஆகும்.

சரி, இந்தக் கதையில் ஹனாய் எங்கே வந்தது என்று தானே கேட்கின்றீர்கள்? அவர் இந்த விளையாட்டின் படி *64* தட்டுக்களை அடுக்கி வைத்தார் என்றால் யுகயுகங்களாக ஆகும் என்று கண்டுபிடித்து வெறும் *8* தட்டுக்களைக் கொண்ட விளையாட்டாக அறிமுகம் செய்தார். அவ்வாறு அறிமுகம் செய்யும் போது பிரான்ஸ் நாட்டுப் பத்திரிகைகளில் எங்கு பார்த்தாலும் வியட்நாமை ஆக்கிரமித்த பிரான்ஸின் செய்கைகளால் ஹனாய் என்ற பெயர் அடிக்கடி தலைப்புச் செய்திகளில் கண்டதால் இவ்விளையாட்டுக்கு ஹனாயின் கோபுரங்கள் என்று பெயர் வைத்ததாகவும் ஆனால், அதன் மூலம் இந்தியாவில் தான் உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்! ஆக, பிரான்ஸ், இந்தியா, வியட்நாம் ஆகிய மூன்று நாடுகளையும் இணைப்பதாக இந்த ஹனாய் கோபுரங்கள் விளையாட்டு உள்ளதும், அதுபற்றி அறிந்து கொண்டதும் ஆச்சரியம் தான்!

சரி, நமது கதைக்கு வருவோம்! நாங்கள் தங்கியிருந்த விடுதியின் பெயர் லா காஸா ஹோட்டல் *(La Casa Hanoi Hotel)*. இது வியட்நாமின் தலைநகரான ஹனாயில் உள்ளது. இங்கு காலையில் எழுந்து அனைவரும் கிளம்பி எங்கள் பைகளை எல்லாம் மீண்டும் மூட்டை கட்டி அங்கேயே வைத்து விட்டு, ஒரு நாளைக்குத் தேவையான உடைகளை மட்டும் எடுத்துக் கொண்டு பேருந்தில் ஏறிக் கொண்டோம். அதற்கு முன் காலைச் சிற்றுண்டியும் அங்கேயே கிடைக்கப்பெற்றோம். வழக்கம் போல் ரொட்டி, ஜாம், பழச்சாறு ஆகியவை தான்.

விடுதியிலிருந்து சுமார் *52* கி.மீ. தூரத்தில் இருந்த லெஜெண்ட் பேர்ல் என்னும் இயற்கை முத்து தயாரிக்கும் நிறுவனத்தினைப் பார்வையிட்டோம். அங்கே எவ்வாறு செயற்கைக் கருத்தரிப்பு முறையில் இயற்கையான சிப்பியில் வைத்து முத்துக்கள் வளர்க்கப்படுகின்றன என்று கண்டு வியப்படைந்தோம். மிகப்பெரிய முத்து நகைக்கடையும், சிப்பிகளில் உருவாக்கப்பட்ட அழகான நகைகளும் காட்சிப்பொருளாக வைத்திருந்தனர். அவற்றின் விலையைப் பார்த்தால் தான் வாயைப் பிளக்கவும் பணப்பையை மூடிக் கொள்ளவும் நேரிட்டது! யாரும் எதுவும் வாங்கியதாகத் தெரியவில்லை! பின்னர் அங்கிருந்து மிக அருகில் *8* கி.மீ. தொலைவில் இருக்கும் ஹலாங் வளைகுடா, ஸ்டெல்லார் ஆப் தி சீஸ் *(Stellar of the Seas – Halong Bay cruises)* எனும் இடத்தில் கடற்கரைக்கு வந்து அங்கிருந்து எங்களுக்காகக் காத்திருந்த விரைவுப் படகு மூலம் சொகுசுக்கப்பலுக்குச் செல்லக் கிளம்பினோம்.

என்ன ஒருநாள் இரவு சொகுசுக்கப்பலில் தங்கப் போகின்றோமாக்கும்? இதில் என்ன புதுமை இருக்கின்றது? இதைச் சென்னைக் கடலிலும் தூத்துக்குடிக் கடலிலும் செய்தால் கூட ஒன்று தானே? என்று தான் நினைத்தேன். ஆனால், வாழ்நாளில் யாராயினும் இதை ஒருமுறை பார்த்து ரசித்து அனுபவிக்க வேண்டிய வியட்நாமுக்கு இயற்கை கொடுத்த கொடை என்று பிரமிப்பின் உச்சிக்குக் கொண்டு சென்று ஒட்டு மொத்தச் சுற்றுலாவின் பயனாகத் திகழ்ந்தது இந்தச் சொகுசுக்கப்பல் பயணம்!

கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நானும் நீயும் என்று ஒரு கவிதைத் தொடர் எழுத ஆரம்பித்தேன். அதில் அடியேன் மலைவளம் குறித்து வரைந்த ஒரு வெண்பா நினைவுக்கு வருகின்றது!

ஆழ்கடல மைதி யிலடியிலு றங்கியே
வாழ்கின்ற கோடது கோடியே - பாழ்கண்ணுங்
கொண்டதைக் காணாதே முற்று வெளிமாயை
மண்ட நகைக்கும் மலை.

ஆழ்கடலின் அமைதிக்குள்ளேயே பல சிகரங்கள் இருக்கும். ஆனால் நமது பாழ்கண்ணோ அப்படிப்பட்ட உள்ளிருக்கும் சிகரங்களை காணாது ஏமாற்றமுற்று வெளியே மாயையாய்த் தெரியும் சிறு குன்றுகளைக் கூட சிகரங்கள் என்று எண்ணிக்கொள்ள அதைக் கண்டு நகைக்கும் மலை!

ஆம், 2000 குட்டிக் குட்டி மலைகளைக் கொண்ட தீவுக்கூட்டம். அதனூடே கப்பலில் சில்லிடும் பயணம். மலைகளினூடே கடலா? கடலின் நடுவே மலைகளா? எனும் கேள்விக்கு விடைகாண முடியாது. இது போதாதென்று காலையிலும் மாலையிலும் அடிவானத்தில் சூரிய சந்திரர்களின் வண்ண விளையாட்டு. அதுவும் நாங்கள் சென்ற அன்று தான் பௌர்ணமி! சொல்லவா வேண்டும்? மாலையில் தங்கத் தட்டாக நிலவுமகளும் அவள் சிரித்து முகம் பார்க்க கடலின் ஒவ்வொரு துளியும் நான் நான் என்று முந்தி அலைகளாகி அந்த அலைகள் நமக்கும் நிலவுக்குமான ஒரு தகதகக்கும் பாதையாக மாறி எதற்கு இந்த மனிதர்கள் விண்கலத்தை ஏவுகின்றனர்? அப்படியே கடலில் நடந்து வந்தால் என்னை அடைந்து விடலாமே என்று அழைப்பு விடுப்பது போல் இருந்தது! நிலவிலிருந்து மீண்டும் சொகுசுக் கப்பலுக்கே வந்து சேர்வோம்!

நாங்கள் தங்கியிருந்தது லா ரெஜினா சொகுசுக்கப்பல். எங்கள் குழுவினருடன் ஓரிரு வெளியாட்கள் மட்டுமே தங்கியிருந்தனர். அவர்களிலும் இரு தம்பதியர்கள் இந்தியர்களே என்று நினைக்கின்றேன். மற்றும் இரு தம்பதியர் வெளிநாட்டவர். மற்ற படி எங்கள் 34 பேர் கொண்ட குழுவுடன் எங்கள் சொகுசுக் கப்பல் பயணம் ஆரம்பமாயிற்று. நாங்கள் அடித்தட்டில் அதாவது முதல் மாடியில் தங்கியிருந்தோம். எனவே எங்கள் அறையிலிருந்து எட்டிப் பார்த்தாலே கடல் தண்ணீர் அருகே தெரிந்தது! இரண்டாவது மாடியில் உணவு விடுதியும், மூன்றாவது மாடியில் உடற்பயிற்சி அறையும் மொட்டை மாடியில் திறந்தவெளி அரங்கு/உணவு விடுதியும் அழகுற அமைந்திருந்தது. நாங்கள் சென்று வந்த அத்தனை நாட்களும் தட்பவெப்ப நிலை எங்களுக்குச் சாதகமாக அமைந்ததும் இந்தப் பயணம் சிறப்பாக அமைந்ததற்கு ஒரு காரணம் ஆகும். ஏனென்றால் மர்பி விதிப்படி நாங்கள் அனைவரும் மிகவும் முன்னேற்பாடாக மழைக்குத் தேவையான குடை மற்றும் ஆடைகளை எடுத்துச் சென்றதால் தானோ என்னவோ மழையே வரவில்லை!

நாங்கள் அனைவரும் அகோரப்பசியோடு மதிய உணவுக்குக் காத்திருக்க, கப்பலின் உணவு விடுதியில் இருந்த பணியாளர்களோ மிகவும் நிதானமாக, ஒன்றன் பின் ஒன்றாக உணவு வகைகளை எடுத்து வைத்துக் கொண்டு இருந்தனர். இத்தனைக்கும் அதிகமான உணவுவகைகளைத் திட்டமிட்டு அவர்கள் செய்து வைக்கவில்லை. சரிதான் நாளை மதியம் வரை மூன்று வேளையும் இப்படித் தான் இருக்கப் போகின்றது என்று கவலைப்பட்டோம்! நமக்குத் தான் இருக்கவே இருக்கின்றது பஹாவுதீனின் அற்புதக் குழம்பு என்று நினைத்து ஆறுதலடைந்தோம்.

அறைக்குச் சென்று உடனே தயாராகி மூன்று மணிக்கு முதல் மாடியிலிருக்கும் வரவேற்பறைக்கு வந்தால் துடுப்புப் படகுச் சவாரி செல்லலாம் என்று கப்பல் தலைவர் அறிவிக்க, அனைவரும் கிளம்பி மீண்டும் விரைவுப்படகில் ஏறி, ஒரு சிறிய தீவில் இறக்கிவிடப்பட்டோம். அந்தத் தீவு ஒரு வட்ட வடிவ மாபெரும் நீச்சல் கடலாகக் காட்சியளித்தது. துடுப்பு வலிக்க முடிந்தவர்கள் இருவர் துடுப்புப் போடும் படகுகளில் வரலாம் என்றும், மற்றவர்கள் பரிசலில் செல்லலாம் என்றும் அறிவித்தார்கள். கடப்பாறை நீச்சல் மட்டுமே அறிந்த நான், மூர்த்தி சார் இருந்த தைரியத்தில் துடுப்புப் படகு வலிக்கச் சென்றேன். நிறைய பேர் அவ்வாறு துடுப்புப் படகைத் தேர்ந்தெடுத்தது அனைவருக்கும் உற்சாகத்தைத் தந்தது. துடுப்பு கொண்டு வெகுதூரத்திற்குச் சென்று வந்தோம். சென்று வந்த பின்னர், நாமா அவ்வளவு தூரம் சென்று வந்தோம் என்ற பிரமிப்பு ஒருபுறமும், இயற்கை அன்னையின் கடல் தொட்டிலில் ஏலேலோ பாடியபடி சென்று வந்த சுகம் ஒருபுறமும், சுற்றிலும் இயற்கையாக உருவாகியிருந்த குகைகளை அருகில் சென்று காண முடிந்த வாய்ப்பு ஒருபுறமும், நண்பர்களின் சுற்றம் ஒருபுறமும் ஆக நாலாபுறமும் நிறைவாக இருந்தது இந்தப் படகுப்பயணம்!

பின்னர் 4.30 மணியளவில் மீண்டும் கப்பலுக்கே திரும்பினோம். உடனே கடலில் நீச்சலடிக்க விரும்புபவர்கள் வரலாம் என்று அறிவித்து, சிலர் மட்டும் அந்தக் குளிர் நீரில் நீச்சல் அடித்து விளையாடினார்கள். அதில் மூர்த்தி சார், வீரபத்திரன், சம்பு சர்மா ஆகியோர் வீர விளையாட்டு ஆட, ஸ்ரீபிரியா, கீதா ஆகியோரும் தைரியமாக உள்ளே இறங்கினார்கள். கொஞ்சம் கொஞ்சமாக இருள் கவியத் தொடங்கியது. அனைவரும் மேல் தட்டுக்கு வந்து நான் முன்பே குறிப்பிட்ட நிலவுத்தாரையை அனுபவிக்க ஆரம்பித்தோம்.

சாதாரணமாக, இது போன்ற சொகுசுக்கப்பலில் செல்பவர்கள் மது அருந்திஆடிப்பாடி மகிழ்ந்து களிப்பதற்காகவே வருவார்கள் போலும். சொகுசுக்கப்பலில் உள்ளவர்கள் அவ்வாறே எங்களையும் எதிர்பார்த்து அடிக்கடி எங்களிடம் மதுவகைகள் வேண்டுமா என்று கேட்டவண்ணம் இருந்தனர்! எங்கள் குழுவில் அவ்வாறு மதுவுண்டு தான் ஆடிப்பாட வேண்டும் என்ற நிலையில் இருந்தவர்கள் யாருமே இல்லை! மது அருந்தாமலேயே அந்த நிலையில் தான் இருந்ததால் பாவம் கப்பல் பணியாளர்கள் ஏமாற்றமடைந்தனர் என்றே கூறலாம்!

கப்பலின் மேல்தளத்தில் இரவு உணவு தயாராகிக் கொண்டு இருந்தது. உணவை எவ்வாறு தயாரிக்கின்றார்கள் என்பதை செய்முறை விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார் ஒரு சமையல் வல்லுநர். நாங்களும்

சளைத்தவர்கள் இல்லை என்று நமது குழுவினரும் உடன் இணைந்து செய்து கொண்டிருந்தனர். முற்றிலும் இருட்டானதும், சாண்டில்யன் மற்றும் கல்கி போன்றோரின் சரித்திர புதினங்களில் வரும் துறைமுகக் காட்சி (குறிப்பாக கடல்ராணி) கண்ணுக்குத் தெரிந்தது. ஆம். நூற்றுக்கணக்கான கப்பல்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நங்கூரம் பாய்ச்சி அழகான விளக்கொளியில் ஆடிக் கொண்டிருந்தது அன்றைய பூம்புகாரின் இந்திரவிழாவை ஒத்து இருந்தது எனலாம்!

பின்னர் அனைவரும் மேல்தட்டில் அமர்ந்து அன்று நில்லாமல் ஆடிக் கொண்டிருந்த சொகுசுக்கப்பலில் நிலாச்சோறு சாப்பிட்டு மகிழ்ந்து பின்னர் ஒரு சிலர் தூண்டிலில் மீன் பிடிக்க, ஒவ்வொருவராக அறைக்குள் சென்று நித்திரையில் ஆழ்ந்தோம்.





08-11-2022 செவ்வாய்க்கிழமை: (5ம் நாள்)

இரவில் அலைமகளின் தொட்டிலில் கண்ணுறங்கி காலை ஆறுமணிக்கு எழுந்தால் கதிரவன் நமக்கு முன்னே எழ ஆரம்பித்திருந்தான். நாலாபுறமும் கடலாக இருப்பதால் ஓ! இது தான் கிழக்கா என்று கதிரவனை வைத்து அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. மேகக்கூட்டம் ஏதுமின்றி செம்பழமாகச் சூரியன் உதிக்கும் கண்கொள்ளாக் காட்சி சொல்லில் அடங்காதது. காலை வழக்கம் போல் தயாராகி காலைச் சிற்றுண்டியை முடித்தோம். உண்மையிலேயே அது சிற்றுண்டி தான். காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் நடுவிலான உணவு *(Brunch) 9* மணிக்கு மேல் தயாராகும் என்றும், இப்போது அனைவரும் குகைகளைப் பார்க்கச் செல்கின்றோம் என்றும் மீண்டும் விரைவுப்படகுக்குச் செல்ல வேண்டும் என்றார்கள். *100*க்கும் மேலான படிகள் ஏறிச் செல்ல வேண்டும், *300* மீட்டர் நீளமான குகை என்று கூறியதால் சிலர் யோசித்து பேருந்திலேயே இருந்தனர். ஆனால் அவர்களும் வந்திருக்கலாம் என்றே பின்னர் தோன்றியது.

Cát Bà Island எனும் கேட் பா தீவு மிகவும் பழமையான தீவு மட்டுமல்ல *280* சதுரகி.மீ. பரப்புள்ள பெரிய மலைத் தீவும் கூட. *6000* ஆண்டுகளாக அங்கே மனிதர்கள் வாழ்ந்ததற்கான அடையாளம் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றார்கள். கேட் பா என்னும் சொல்லுக்குப் "பெண்களின் தீவு" என்பதே பொருளாம். மூன்று ட்ரான் அரச வம்சத்துப் பெண்களைக் கொன்று கடலில் வீசியதாகவும், அவர்களின் உடல்கள் ஒவ்வொரு தீவில் கரை ஒதுங்கியதாகவும் கூறப்படுகின்றது. இத்தீவில் அதிசயிக்கத் தக்க பல குகைகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றான ட்ரூங் ட்ரங் எனும் குகைப்பகுதிக்குள் செல்லவே நாங்கள் கிளம்பினோம். ஆர்வத்துடன் விரைவுப்படகில் ஏறி, விரைவிலேயே தீவை வந்தடைந்தோம்.

இந்த மலைத்தீவுக்கூட்டமே ஒரு அதிசயம் என்றால் நாங்கள் சென்ற குகையோ அதிசயத்திலும் அதிசயம். லட்சக்கணக்கான ஆண்டுகளாக நீருளிக் கொண்டு இயற்கை செதுக்கிய குகை அது. சுமார் *300* மீட்டர் நீளம் கொண்டு குகைக்குள்ளே உயரம் சில இடங்களில் *10* மீட்டர்களும், சில இடங்களில் *1* மீட்டரும் கொண்டு பிரம்மாண்டமான ஒரு ஆலயமாக விளங்குகின்றது இந்தக் குகை. ஏற்கனவே கூறியபடி, *100* படிகளில் ஏறித் தான் இந்தக் குகையை அடைய முடிகின்றது. இவை அனைத்தும் சுண்ணாம்புப் பாறைகள் வகைகளாகும். நீர் அதில் பல்லாண்டுகளாக மோதி, இந்தக் குகைகள் உருவாகியிருக்கின்றது. சுற்றுலாப் பயணிகள் உள்ளே செல்லும் விதமாக அலங்கார விளக்குகளும், காங்க்ரீட் பாதையும் போட்டிருக்கின்றார்கள். மிகவும் வசதியாக இருந்தது. அனைவரும் வந்திருக்கலாமே என்று மீண்டும் தோன்றியது. நம்மூரில் இது போன்ற குகை இருந்தால் அவரவர் பெயர்களைக் கிறுக்கி வைத்திருப்பார்களே என்ற எண்ணமும் எழாமலில்லை! செக்கோ சிவலிங்கமோ என்று எனது கண்களுக்கோ அனைத்தும் கோடிக்கணக்கான சுயம்பு லிங்கங்களாகத் தோன்றியது! மிகவும் ரம்மியமான அந்தக் குகைப்பகுதியைப் பலவித புகைப்படங்கள் எடுத்துக் கொண்டு வெளியேறினோம்.

பின்பு *9* மணி போல் மீண்டும் எங்கள் கப்பலுக்கே திரும்பினோம். *10* மணிக்குள் அனைவரும் பெட்டியைத் தூக்கிக் கொண்டு அறையைக் காலி செய்து வெளியேற வேண்டும் என்றும் அடுத்ததாக ஹனாய் திரும்பிச் செல்லவிருக்கின்றோம் என்றும் கூறியதால் வெளியேறி காலைமதிய உணவான ப்ரஞ்ச் சாப்பிட்டுப் பின் சொகுசுக்கப்பலில் இருந்து வெளியேறி விரைவுப்படகில் ஏறினோம்.

விரைவுப்படகு *11* மணி வாக்கில் மீண்டும் ஹலாங் வளைகுடாப் பகுதிக்கு வருவதற்குள் எங்கள் கையில் கால இயந்திரம் ஒன்று கிடைத்தது. அது பலரையும் *40* ஆண்டுகள் பின்னோக்கிச் சென்று இழுத்து வந்தது. அந்தக் கால இயந்திரம் வேறு ஏதுமல்ல, யாருமல்ல! நமது வீரபத்திரன் தான்! வீரபத்திரனும், ராஜபாண்டியனும் சேர்ந்து கொண்டு ஒட்டு மொத்தப் படகையும் கலகலப்பாக்கினார்கள். வீரபத்திரன் தேர்ந்த புகைப்படக்கலைஞரும் கூட. இப்போதைய திருமண நாளில் புதுமணமக்களை விதவிதமாக எடுக்கின்றார்கள் அல்லவா? அதே போல் ஒவ்வொரு தம்பதியரையும் நிற்க வைத்து உட்கார வைத்து விதவிதமாகப் படம் எடுக்க ஆரம்பித்தார்கள். அதற்கு அவர்களே மாதிரியாக நடித்துக் காட்டியது அமர்க்களம்! முதலில் ஒவ்வொருவரும் வெட்கப்பட்டாலும், யாரையும் விடவில்லை. நாகேஸ்வரன் – யமுனா, பழனிவேல் – செம்பியன்மாதேவி, கிரிதர் – அனுராதா, ஜெயசீலன் – கீதா, சுதாகர் – கௌசல்யா தேவி, கலைராஜ் – மீனாட்சி, ராஜேந்திரசிங் – சரிதா ஆகிய *7* தம்பதியர்களைப் படம் எடுத்து முடிப்பதற்கும், கரை வந்து சேர்வதற்கும் சரியாக இருந்தது. அனைத்துப் புகைப்படங்களுமே அருமையாக அமைந்திருந்தன. அநேகமாக ஒவ்வொருவரும் அவர்கள் வீட்டில் விரும்பி அச்சடித்து மாட்டிக் கொள்ளும் வகையில் இருந்தது சிறப்பு.

அங்கே காத்துக் கொண்டிருந்த எங்கள் பேருந்தில் ஏறி ஹனாய்க்குக் கிளம்பினோம். இடையில் சரியாக *1* மணியளவில் ஹாப்பி லாண்ட் உணவு விடுதியில் வியட்நாமிய மதிய உணவு உண்டோம். சுடச் சுட அரிசி சாதம் கிடைத்தது. வழக்கம் போல் பஹாவுதீனின் ரசம், புளிக்குழம்பு, ஊறுகாய் உதவியதால் மதிய உணவு திருப்தியாக உண்டோம். மீண்டும் கிளம்பி வரும் வழியில் மூங்கில் இழை நிறுவனம் ஒன்றைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. மூங்கில் இழை கொண்டு எடை இல்லாத துணி நெய்து அதைக் கொண்டு பல வீட்டு உபயோகப்பொருட்கள் தயாரித்திருந்தனர். அனைவரும் ஆர்வமாக வாங்கினர். அங்கிருந்த பெண்களின் விற்பனைத் திறன் அதிசயிக்க வைத்தது.

ஹனாய் நகரம் வந்தடையும் போது மாலை *6.30* ஆகியிருந்தது. இருட்ட ஆரம்பித்து விட்டதால் பழைய ஹனாய் நகரின் ஊடே இருந்த ஷாய்கா இந்திய உணவகத்தில் இரவு விருந்து சாப்பிட்டோம். சுவையாகப் பலவித பதார்த்தங்கள் தயாரித்துப் பரிமாறியதால் அனைவரும் விரும்பி வயிறார உண்டோம். பின்னர் எங்கள் விடுதியான லா காஸாவுக்குத் திரும்பி எங்கள் அறைகளில் தஞ்சம் புகுந்தோம். உல்லாசச் சுற்றுலா முடிந்து மறுநாள் ஊருக்குக் கிளம்ப வேண்டியதிருந்ததாலும், வாங்கிய பொருட்களை எல்லாம் விமானப் பயண விதிகளுக்குட்பட்டு அடைக்க வேண்டியதிருந்ததாலும் சீக்கிரமே உறங்கிவிட்டோம்.

09-11-2022 (புதன்கிழமை) 6ம் நாள்:

தாய்நாடு திரும்பவேண்டும் என்றதும் அதில் ஒரு உற்சாகம் தொற்றிக் கொண்டது! முக்கியமாக நமது உணவு வகைகளைச் சாப்பிடலாம் அல்லவா?! அனைவரும் காலை எழுந்து அங்கேயே சிற்றுண்டியையும் முடித்துக் கொண்டு தங்கள் பெட்டிகளை எடுத்து அறையைக் காலி செய்து பேருந்தில் ஏறும் போது மணி 8.50.

அங்கிருந்து 45 நிமிடப் பேருந்துப் பயணத்தில் வியட்நாம் அதிபர் ஹோ சி மின் அவர்களின் உடலைப் பாடம் செய்து பாதுகாக்கப்பட்டிருக்கும் அருங்காட்சியகத்துக்கு வந்தடைந்தோம். நமது நாட்டில் குடியரசு தின அணிவகுப்பில் நடப்பது போல அதிகளவு பரப்பளவு உள்ள இடம் இந்த அருங்காட்சியகம். கூகுள் வரைபடத்தைப் பார்த்தாலே அதன் பிரம்மாண்டம் தெரியவரும்.

வியட்நாமிலேயே பிறந்து வியட்நாமுக்காகவே தனது முழு வாழ்நாளையும் கழித்துத் திருமணம் செய்து கொள்ளாமல் நாட்டுக்காகவும் கம்யூனிசத்துக்காகவுமே தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஹோ சி மின் உடலை அப்படியே வைத்திருக்கின்றார்கள். அவரது உடலைப் பாதுகாத்திருக்கும் நினைவகம் மிகுந்த பாதுகாப்புடனும் மரியாதையுடனும் நடத்தப்படுவதைக் கண்ட போது வியட்நாமியரின் தேசபக்தி அறிய முடிந்தது. காலத்தை வென்று நிற்கும் அவரது புகழ் அவரை அந்த நாட்டவர்கள் கொண்டாடுவதற்குத் தகுந்த காரணம் கற்பிக்கின்றது. தற்காலத் தலைமுறையினரான பள்ளி இளஞ்சிறார்களை அவர்களது ஆசிரியப்பெருமக்கள் வழிநடத்தி வந்து சுற்றுலாவாகச் சென்று வந்ததில் நாங்களும் இணைந்து கொண்டதில் மனநிறைவு கொண்டோம். அருகிலேயே ஹோ சி மின் அவர்களின் அருங்காட்சியகம் பெரியதாக இருந்தாலும் எங்களின் நேரமின்மை காரணமாக உள்ளே செல்லவில்லை.

ஹோ சி மின் நினைவகத்துக்கு அருகிலேயே புத்தபிரான் போதிசத்துவரின் ஒரு தூண் சீனக் கோவில் ஒன்றும் அமைந்துள்ளது. எண்கோண வடிவில் உருவாக்கப்பட்டு, கீழே ஒரே தூணில் அமைந்து ஒரு குளத்திற்குள் நிற்கும் இந்தக் கோவில் மிகச் சிறிதானாலும் அனைவரும் வந்து பக்தியுடன் வழிபாடு செய்கின்றனர்.

காலை 11.30 மணியளவில் வியட்நாமின் நாணயத்தின் பெயரைத் தன்னகத்தே கொண்ட டாங் கூஈ வான் சந்தைக்குச் சென்றோம். அது ஒரு மொத்தவிற்பனைக் கூடம். 1994ல் பெரிய ஒரு தீவிபத்து ஏற்பட்டாலும், அதன் பின் மீண்டும் மும்முரமாக இயங்கிக் கொண்டு தான் இருக்கின்றது இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சந்தை. வியட்நாமில் உருவாக்கப்படும் அனைத்தும் கிடைப்பதால் பலரும் தங்களுக்குப் பிடித்ததை வாங்க ஆரம்பித்தனர். ஆனால் குறைந்த கால அவகாசமே இருந்ததால் அவசர அவசரமாக 12.20 மணிக்குக் கிளம்பினோம்.

மதிய உணவுக்காக ஸ்பைஸ் டேஸ்ட் ஆப் இந்தியா (Spices Taste of India) என்ற உணவகத்துக்குச் சாப்பிடச் சென்றால் அங்கே இன்ப அதிர்ச்சியாகத் தமிழக மெதுவடை, சாம்பார், ரசம் என்று மிகவும் சுவையாகக் கிடைத்தது. யூ டியூப் வில்லேஜ் சமையல் சானலில் சொல்வது போல் "எல்லோரும் ஒரு பிடி!" பிடித்தார்கள். அங்கே இருந்த ஏழுமலை என்ற திருவண்ணாமலையைச் சார்ந்த சமையல் கலைஞரே இந்தச் சுவைக்குக் காரணம் என்று அவருக்கு நன்றி சொல்லி விமான நிலையத்துக்குக் கிளம்பினோம்.

மதியம் 2.20 மணிக்கெல்லாம் விமானநிலையத்தில் வந்து சேர்ந்தோம். அனைவரின் பெட்டிகளையும் சரிபார்த்து, விமான நிலையத்தில் காத்திருந்தோம். வழக்கம் போல் வியட்ஜெட் விமானப் பணியாளர்கள் நத்தை வேகத்தில் இயங்கினர். கிட்டத்தட்ட மூன்று மணி நேரங்கள் வரிசையில் நின்று ஒரு வழியாகப் பாதுகாப்பு சோதனையும், சுங்கச் சோதனையும் முடித்து விமானத்தில் ஏறும் போது மணி 6. அங்கிருந்து 4 மணி நேரம் 45 நிமிட விமானப் பயணம். மீண்டும் 1.30 மணி நேரத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டும் அல்லவா? எனவே இரவு 9.48 மணியளவில் மும்பை சத்திரபதி சிவாஜி விமான நிலையத்தில் தரையிறங்கியதும் எங்கள் இன்பச் சுற்றுலா நிறைவுற்றது. சென்னை செல்வோருக்கு அதிகாலை விமானம் என்பதால் அங்கேயே தங்கினார்கள். சிவகாசி செல்லவிருந்த நாங்கள் நால்வரும், வீரபத்திரனும், ராஜபாண்டியனும் மும்பை விமான நிலையம் அருகே ஒரு விடுதியில் அறை எடுத்துத் தங்கினோம். மறுநாள் 10-11-2022, வியாழக்கிழமை அன்று காலை 10 மணியளவில் விமான நிலையம் சென்று 12 மணிக்கு மதுரை விமானத்தில் ஏறி மதியம் 1.50 மணிக்கு மதுரை வந்தடைந்தோம். வரும் வழியில் அறுவரும் அறுசுவை உணவுண்டு நான், ராஜபாண்டியன் மற்றும் வீரபத்திரன் ஆகிய மூவரும் வீரபத்திரனின் மகிழ்வுந்தில் ஏறி, சிவகாசியில் இல்லம் வந்து சேரும் போது மாலை மணி 4.

எந்த ஒரு தங்குதடையுமின்றி, மழை, குளிர் போன்ற சிக்கல்களின்றி, நோய்வாய்ப்படுதல் போன்ற பிரச்னைகளுமின்றி அனைவரின் மனதிலும் நீங்காத நினைவுகளை உருவாக்கித் தந்த பட்டயக்கணக்காளர்கள் சிவகாசிக் கிளைக்கும், இதைச் செயல்படுத்தித் தந்த வீரபத்திரன், ராஜபாண்டியன் ஆகியோருக்கும், பெற்ற தாய் போல் பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்த மீரஜ் டிராவல்ஸ் பஹாவுதீனுக்கும், மற்றும் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் நன்றி என்னும் மூன்றெழுத்துச் சொல்லால் ஈடு கட்ட முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக எல்லாம் வல்ல இறைகருணை துணைநின்று அனைவரையும் அன்பு வழிநடத்தியது என்பதை உள்ளம் உருகி வியந்து நினைந்து இந்த வியட்நாம் 2022 பயணக்கட்டுரையை நிறைவு செய்கின்றேன். 🙏